# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 015/மா/2023**

**நாள்: 15.02.2023**

திரு. T. காளிராஜன்,
சிவகாசி – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
சிவகாசி மாநகராட்சி, சிவகாசி – எதிர்மனுதாரர்

சிவகாசி, திருத்தங்கல், முருகன் காலனி, பள்ளப்பட்டி ரோடு, கதவு எண்.770/1203 என்ற முகவரியில் வசிக்கும் திரு. T.காளிராஜன் என்பவரின் 25.11.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 28.11.2022–ல் பெறப்பட்டு 015/மா/2023 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

சிவகாசி, திருத்தங்கல், முருகன் காலனி, பள்ளப்பட்டி ரோடு, கதவு எண்.770/1203 என்ற முகவரியில் வசிக்கும் திரு. T. காளிராஜன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 25.11.2022 நாளிட்ட தனது மனுவில் :

“ நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். எனது தாயாரின் இறப்பு சான்றிதழில் லட்சுமி என்று பெயரிட்டு உள்ளது. அதை லட்சுமித்தாய் என்றும் தங்கராஜன் என்று திருத்தம் செய்வதற்கு சிவகாசி மாநகராட்சியில் பலமுறை மனு கொடுத்தும் பெயர் திருத்தம் செய்வதற்கு உண்டான உரிய ஆவணங்கள் கொடுத்தும் என்னை 13.07.2022 முதல் அலைகழித்தல், அவமானபடுத்துதல், மன உளைச்சலுக்கு ஆளாக்குகிறார்கள். மேற்படி இந்த மனு மீது தக்க பரிசீலனை செய்து அவர் மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்” என தெரிவித்துள்ளார்.

2) இம்மனு தொடர்பாக இம்முறைமன்ற நடுவ 19.01.2023 நாளிட்ட அறிவிப்பு மூலம் சிவகாசி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை கோரப்பட்டது. மாநகராட்சியிடமிருந்து பதில் ஏதும் பெறப்படவில்லை.

3) இந்நிலையில் இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 07.02.2023 அன்று நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி 19.01.2023 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4) மனுதாரர் தனது 30.01.2023 நாளிட்ட மின்னஞ்சலில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:

" முறையீட்டு மனு எண்.015/மா/2023 தொடர்பாக மனுதாரர் ஆன எனக்கு உரிய தீர்வு பெறப்பட்டது. இறப்பு சான்றிதழை பெற்றுக்கொண்டேன். ஆணையாளருக்கு நன்றி. ஆணையாளர் மீது கொடுக்கப்பட்ட முறையீட்டு மனுவை திரும்பப்பெறுகிறேன்" என தெரிவித்துள்ளார். மேலும் 07.02.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை.

6) சிவகாசி மாநகராட்சி சுகாதார அலுவலர்(பொறுப்பு) மற்றும் சுகாதார ஆய்வாளர் ஆகியோர் 07.02.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளனர் :

" விருதுநகர் மாவட்டம் சிவகாசி மாநகராட்சியில் திரு. T. காளிராஜன் என்பவர், அவரது தாயாரின் இறப்புச்சான்றிதழில் அவரது தாயாரின் பெயர் லட்சுமி என்று உள்ளதை லட்சுமித்தாய் என திருத்தம் செய்து வேறொரு இறப்புச் சான்றிதழ் அளிக்குமாறு 16.09.2022 அன்று மனு அளித்திருந்தார். திருத்தங்கல் நகராட்சி, மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட போது, கணினியில் ஏற்பட்ட தொழில் நுட்ப கோளாறு காரணமாக காலதாமதம் ஏற்பட்டு அவரது மனு கடந்த டிசம்பர் மாதம் 2022ல் பரிசீலிக்கப்பட்டு, திருத்தம் செய்யப்பட்ட இறப்புச்சான்றிதழ் மனுதாரருக்கு வழங்கப்பட்டுவிட்டது என்பதை இம்முறைமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்" என தெரிவித்துள்ளனர்.

7) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது மின்னஞ்சல், மற்றும் சிவகாசி மாநகராட்சி சுகாதார அலுவலர்(பொறுப்பு), சுகாதார ஆய்வாளர் ஆகியோரின் வாக்குமூலம் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

8) மனுதாரர் தனது முறையீட்டு மனுவில் தனது தாயார் பெயரில் உள்ள சொத்துக்களை பாகப்பிரிவினை செய்ய ஏதுவாக இறப்புச்சான்றிதழில் தனது தாயாரின் பெயர் 'லட்சுமிதாய்' என்பதற்கு பதிலாக 'லட்சுமி' எனவும் தனது தந்தை பெயர் 'தங்கராஜன்' என்பதற்கு பதிலாக 'தங்கராஜா' என தவறுதலாக பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் இதற்கு திருத்தம் செய்யக்கோரி சிவகாசி மாநகராட்சிக்கு முறையீடு செய்தும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என தெரிவித்துள்ளார்.

9) பின்னர் மனுதாரர் தனது 30.01.2023 நாளிட்ட மின்னஞ்சலில் தனக்கு உரிய தீர்வு கிடைத்துவிட்டது என்றும் திருத்தம் செய்யப்பட்ட இறப்பு சான்றிதழை பெற்றுக்கொண்டேன்

என்றும் தெரிவித்து தனது மேல்முறையீட்டு மனுவினை திரும்ப பெற்றுகொள்வதாக தெரிவித்துள்ளார்.

மனுதாரர், திருத்தம் செய்து வேறொரு இறப்புச்சான்றிதழை வழங்ககோரும் மனுவினை **16.09.2022**ல் மாநகராட்சிக்கு அளித்த பிறகு, **23.12.2022** அன்று மனுதாரருக்கு திருத்தம் செய்யப்பட்ட இறப்புசான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. மேலும் திருத்தங்கல் நகராட்சி, மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டபோது கணினியில் ஏற்பட்ட தொழில்நுட்ப கோளாறு காரணமாக காலதாமதம் ஏற்பட்டதால் டிசம்பர் **2022**ல் பரிசீலிக்கப்பட்டு திருத்தம் செய்த இறப்புச்சான்றிதழ் மனுதாரருக்கு வழங்கப்பட்டுள்ளதை சிவகாசி மாநகராட்சி அலுவலர்களின் வாக்குமூலத்திலிருந்து அறியமுடிகிறது. இருப்பினும் காலதாமதத்திற்கான காரணத்தை உரிய அறிவிப்பு மூலம் மனுதாரருக்கு தெரியப்படுத்தவில்லை என்பதும் விசாரணையில் அறிய முடிகிறது. மேலும் மனுதாரர் தனது மனுவில் மேற்சொன்ன திருத்தம் செய்யப்பட்ட இறப்புச்சான்றிதழ் தொடர்பாக தன்னை அலைக்கழித்தும் அவமானப்படுத்தியதாகவும் அதனால் மன உளைச்சலுக்கு ஆளானதாகவும் புகார் தெரிவித்துள்ளார்.

அரசு மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் நோக்கில் பல்வேறு நலத்திட்டங்களை முன் எடுத்து செய்து வருகின்ற நிலையில் பொதுமக்களிடமிருந்து பெறப்படும் இதுபோன்ற கோரிக்கைகளை சம்மந்தப்பட்ட அலுவலர்கள் உடனுக்குடன் நிறைவேற்றினால்தான் அரசுக்கும் மாநகராட்சிக்கும் நற்பெயர் கிட்டும் என்பதை அலுவலர்கள் உணர்ந்து தங்கள் கடமையை செவ்வனே ஆற்றிட வேண்டும் என இம்முறைமன்றம் கருதுகிறது.

மேற்சொன்ன திருத்தம் செய்து வழங்கப்பட வேண்டிய இறப்புச்சான்றிதழ் பெறுவதற்கு மனுதாரரின் மிகுந்த மன உளைச்சலுக்கு காரணமாக இருந்த சம்மந்தப்பட்ட சிவகாசி மாநகராட்சி அலுவலர்களின் இச்செயலை இம்முறைமன்றம் வன்மையாக கண்டிக்கிறது. இதற்கு பொறுப்பான சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான கடுமையான ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு பரிந்துரைப்பதுடன் சம்மந்தப்பட்ட அலுவலர்களை வேறு மாநகராட்சிக்கு மாற்றம் செய்திட நடவடிக்கை எடுக்கவும் பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது. **2016**–ம் ஆண்டு காலமான மனுதாரரின் தாயாரின் இறப்புச்சான்றிதழ் **23.12.2022** அன்றுதான் திருத்தி அளிக்கப்பட்டுள்ளது கண்டிக்கத்தக்கது.

The Hon'ble Chief Minister has instructed the Departments of Revenue and Municipal Administration & Water Supply mainly to ensure issue of certificates promptly without giving room for complaints and delays as we could see in the media reports and Government websites. This being so, the indifference lethargy and casual approach of the Corporation authorities of Sivakasi in this complaint are extremely deplorable and condemnable. They have the audacity to cause a prolonged delay like this that has resulted in the petitioner moving this Forum. They have also disobeyed Hon'ble Chief Minister's instructions which cannot be brooked. The DMA is instructed to launch severe disciplinary action against the delinquents concerned in the issue upto the

Commissioner whose supervisory slackness and default have contributed to the overall delay, inefficiency and wilful failure of delivery of services to the petitioners. The Sanitary Inspector Thiru D. Kandasamy should be transferred to some other Corporation as the petitioner has specifically named him in the letter.

2023-ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 15-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு.T. காளிராஜன்,
த/பெ. ஆர். தங்கராஜன்,
770/1203, பள்ளப்பட்டி ரோடு,
முருகன் காலனி, திருத்தங்கல்,
சிவகாசி.

2)ஆணையர்,
சிவகாசி மாநகராட்சி,
சிவகாசி.

3)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

4)இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

20/2/23

செயலாளர்

20.2.2023